# தமிழ்மொழியும் இலக்கியமும்



தரம் –08

அலகு:07 பேராசிரியர் ம.மு.உவைஸ்


ம.மு.உவைஸ்
(இலங்கை)
பணி : பேராசிரியர்
படைப்புத்திறன் : சமய நூல்கள்
படைப்புகள் : மண் வாசனை,
பாற் காவடி,
மணற்கோவில்,
சிறுவர் கதை இலக்கியம்,
இஸ்லாமியத் தென்றல்,
இஸ்லாம் வளர்த்த தமிழ்,
அரபு சொல் அகராதி
அமைப்புகளில் பொறுப்பு : இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை
தலைமையேற்று நடத்தினார்.

# பேராசிரியர் ம.மு உவைஸ்

- தமிழ் இலக்கியப் பரப்பிலே இஸ்லாமிய இலக்கிய துறையைத் தடம்பதிக்கச் செய்த அறிஞர்களில் முதன்மையானவர் பேராசிரியர் ம.மு.உவைஸ்
- இவர் தமிழில் சிறப்புப் பட்டத்தையும் அதே துறையில் முதகலைமாணிப்பட்டத்தையும் 1976ம் ஆண்டு முஸ்லிம் தமிழ்க் காப்பயங்களைப் பற்றியதோர் ஆய்வினை சமர்ப்பித்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர்.
- பல்கலைக்கழக விரிவுரையாளராகவும், கல்லூரி ஆசிரியராகவும் வணிக மன்ற மொழிபெயர்ப்பாசிரியராகவும் பரீட்சைத் திணைக்களப் பரீட்சகராகவும் தனது பல்முக ஆயமையை கொண்டவராவர்.
- இலக்கியம், சமயம், வரலாறு, பிரயாணம் முதலிய துறைகளில் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களையும் மொழி பெயர்ப்பு கட்டுரைகள் உட்பட்ட பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

- மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்துறையின் முதல் தலைமைப் பேராசிரியராகப் பதவி வகித்தார்.
- சுவாமி விபுலாநந்தர் அவர்களின் மாணவரான இவர் குருவை போன்றே செய்யுள் புனைதல் மற்றும் இறைவனை துதிப்பவராகவும், சமய வாழ்வைளும், ஒழுக்கத்தையும் வலியுறுத்துவராகவும் அமைந்தார்.
- "தாமின் புறுவ துலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்ற வகையில் வாழ்ந்து தமிழ் நல்உலகல் தடம்பதித்தவர் பேராசிரியர் ம.மு உவைஸ்

# 01. பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. “வெகு துலாம்பரமாக ஒரு அறிஞர் தோன்றுவார்” இங்கு துலாம்பரம் என்பது?

   I. ஆரவாரம் II. வெளிப்படை

   III. மறைமுகம் IV. அமைதி

2. “தமிழ் பண்பாட்டையும், இலக்கியத்தையும் விசாலமான” இங்கு விசாலம் என்பதன் எதிர்ப்பதம்

   I. அகலம் II. ஒடுக்கம்

   III. மிகப்பெரிய IV. அகண்ட

3. பேராசிரியர் ம.மு.உவைஸ் என்ற கட்டுரையை எழுதியவர்?

   I. மு.நல்லதம்பி II. கவிமணிப் புலவர்

   III. சி.தில்லைநாதன் IV. த..கலாமணி

4. கருத்தரங்கு என்பதனைப் பிரித்தால்

   I. கருத் +கரங்கு II. கருத்து+ அரங்கு

   III. கருத் +தரங்கு IV. கருத்து+ அங்கு

5. வினையடியாக வராத சொல்

   I. பறக்கும் II. நில்

   III. ஓடு IV. பிடி

6. குறிப்பு வினையாக அமையும் சொல்:

I. ஒடு II. கரியன்

III. உண்பான் IV. கூவியது

7. அமர்ந்தான் என்பதன் வினையடி

I. அமர் II. அமர்ந்த

III. அமர்ந்து IV. தான்

8. தெரிநிலை வினையின் போது எவ்இடைநிலைகள் நிகழ்காலத்தைக் காட்டும்

I. த், ட், ற் II. கிறு, கின்று III. ப், வ் IV. இன், இ

9. தெரிநிலை வினையின் போது எவ்இடைநிலைகளைப் பெற்று எதிர் காலத்தைக் காட்டும்

I. ப், வ் II. ட், ற், ன் III. இன், இ IV. கின்று, *கிறு*

10. அவன் பெருஞ்செல்வன் இங்கு பெருஞ் செல்வன் என்பது?

I. தெரிநிலை வினை II. முற்று வினை

III. எச்ச வினை IV. குறிப்பு வினை

# 02. சரியான விடையுடன் இணையுங்கள்

| | |
|---|---|
| 1. தசாப்தம் | வரைந்தான் |
| 2. துலங்குதல் | பத்தாண்டு |
| 3. தெரிநிலை வினை | ஆவல் |
| 4. கரவின்றி | விளங்குதல் |
| 5. வேட்கை | மறைவின்றி |

03. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1.பேராசிரியர் ம.மு உவைஸ் அவர்கள் பெற்ற பட்டங்கள் எவை?

2.பேராசிரியர் ம.மு உவைஸ் அவர்களின் பங்களிப்புடன் இடம் பெற்ற இலக்கிய மாநாடுகள் எவை?

3.பேராசிரியர் அவர்கள் எவ்வாறான மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தார்?

4.எவ் திருக்குறளின் எடுத்துக்காட்டாக கற்றறிவாளர் பேராசிரியர் உவைஸ் விளங்குகின்றார்?

5.வினைச் சொல் என்றால் என்ன?

6. ஒரு வினைச் சொல்லின் அமைப்பைத் தருக?

4. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.

1. "பேராசிரியர் ம.மு.உவைஸ்" என்ற கட்டுரை "இலங்கைத் தமிழ் இலக்கியம்" என்ற நூலில் இடம் பெற்றுள்ளது ( )

2. "ஓடும்" என்பது ஓடு என்ற வினையடியையும், "உம்" என்ற விகுதியையும் கொண்ட வினைச் சொல் ஆகும் ( )

3. கடு நடையன் என்பது காலத்தை வெளிப்படையாகக் காட்டி நிற்பதால் குறிப்பு வினை எனப்படும் ( )

4. 1979ம் ஆண்டில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத் துறைக்கு சிறந்த - பணி ஆற்றினார் ( )

5. சுவாமி விபுலானந்தர் மாத்திரம் பேராசிரியர் உவைஸின் ஆசிரியர் ஆவார் ( )

# விடைகள்

01. பல் தேர்வு வினா

1. II
2. II
3. III
4. II
5. I
6. II
7. I
8. I
9. I
10. IV

02.

1. தசாப்தம் - பத்தாண்டு
2. துலங்குதல் - விளங்குதல்
3. தெரிநிலை வினை – வரைந்தான்
4. கரவின்றி - மறைவின்றி
5. வேட்கை - ஆவல்

04.

1. சரி
2. சரி
3. பிழை
4. சரி
5. பிழை

03. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1. பேராசிரியர் ம.மு உவைஸ் அவர்கள் பெற்ற பட்டங்கள் எவை?

i. தமிழ் சிறப்புப் பட்டம் ii. முதுகலைமாணி

2. பேராசிரியர் ம.மு உவைஸ் அவர்களின் பங்களிப்புடன் இடம் பெற்ற இலக்கிய மாநாடுகள் எவை?

மருதமுனை, திருச்சி, சென்னை, கொழும்பு கீழ்க்கரை, காயல் பட்டிணம்

3. பேராசிரியர் அவர்கள் எவ்வாறான மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தார்?

தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு

4. எவ் திருக்குறளின் எடுத்துக்காட்டாக கற்றறிவாளர் பேராசிரியர் உவைஸ் விளங்குகின்றார்?

“தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்”

5. வினைச் சொல் என்றால் என்ன?

செயலை உணர்த்தி நிற்கும் சொற்கள் வினைச் சொற்கள் எனப்படும்

6. ஒரு வினைச் சொல்லின் அமைப்பைத் தருக?

வினையடி + இடைநிலை + விகுதி

# வினைச்சொற்கள்

# வினைச்சொற்கள்

செயல் குறித்து வருவன யாவும் வினை எனப்படும்.

வினைச் சொல்லின் அமைப்பு

**வினையடி + இடைநிலை + விகுதி**

# உதாரணம்

- ஓடு-வினையடியை மட்டுமே கொண்ட வினைச்சொல்.
- ஓடும்-ஓடு என்ற வினையடியையும் உம் என்ற விகுதியையும் கொண்ட வினைச்சொல்.
- ஓடினான்-ஓடு என்ற வினையடியையும் இன் என்ற ஆண்பால் விகுதியையும் கொண்ட வினைச்சொல்.

# வினைச் சொற்களின் பண்புகள்

- வினைச்சொற்களின் பொதுவான பண்பு செயலை உணர்த்துவதாகும்.
- சென்றான், படிக்கின்றான், உண்பான் ஆகிய சொற்கள் முறையே இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பனவற்றை உணர்த்தி நிற்பது ஆகும்.

# வினைச் சொற்களின் வகைகள்

வினைச்சொற்களை அவற்றின் அமைப்பு,பொருள், வாக்கியத்தில் அவற்றின் தொழிற்பாடு முதலிய அடிப்படைகளில் பல வகையாகப் பாகுபடுத்தலாம்.

1.தெரிநிலை வினையும் குறிப்பு வினையும்.

2.முற்று வினையும் எச்ச வினையும்.

3.ஏவல் வினை

4.வியங்கோள் வினை

# தெரிநிலை வினை

- வினைச்சொற்கள் செய்பவன்,செயல்,காலம் ஆகியவற்றை வெளிப்படையாக உணர்த்தி நிற்கின்றன வினை தெரிநிலை வினை எனப்படும்.
- இவ்வினைச்சொற்கள் பகுதியாற் செயலையும் இடைநிலையால் காலத்தையும் விகுதியால் திணை,பால்,எண், இடத்தையும் உணர்த்தி நிற்கின்றன.

- தெரிநிலைவினை த்,ட்,ற்,இன்,இ என்னும் இடைநிலைகளைப் பெற்று இறந்த காலத்தைக் காட்டும்.
- கிறு,கின்று என்னும் இடைநிலைகளைப்பெற்று நிகழ்காலத்தைக்காட்டும்
- ப்,வ் என்னும் இடைநிலைகளைப் பெற்று எதிர்காலத்தைக்காட்டும்.

# குறிப்பு வினை

- சொற்களில் செய்பவன் மட்டுமே வெளிப்பட்டு நிற்கும் ஆயின் குறிப்பு வினையாகும். காலத்தை வெளிப்படையாகக் காட்டாது. இச் சந்தர்ப்பத்திற்கேற்ப காலத்தைக் குறிப்பால் உணர்த்தி நிற்கும்.
- இராமன் கரியன்
- அவன் கடுநடையன்

# பயிற்சி

1.அ'' பகுதியிலுள்ள வினாக்குப் பொருத்தமான விடையை ஆ பகுதியிலிருந்து தெரிவு செய்து இணைக்குக.

| அ | ஆ |
|---|---|
| வினைச்சொல் | எதிர்காலம் |
| ஓடினான் | நிகழ்காலம் |
| வருவாள் | அஃறிணை |
| விரைகின்றது | இறந்தகாலம் |
| செய்கின்றாள் | மூன்று காலமும் உணர்த்தும் |

**2.பின்வரும் சொற்கள் வைத்து வாக்கியம் அமைக்கும் (வாக்கியம் ஒவ்வொன்றும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருக்கு வேண்டும் )**

- கண்டுபிடித்தார்கள்:-
- சிரித்தான்:-
- கேட்டாள் -
- வரைந்து முடித்தாள்:-
- செய்தான்:-

# 3.பின்வரும் அட்டவணையை நிரப்புக .

| இல | வினைச்சொல் | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | பாடினான் | | | | |
| 2 | மேயந்தன | | | | |
| 3 | எழுதுகின்றார்கள் | | | | |
| 4 | வருவான் | | | | |
| 5 | நின்றாள் | | | | |
| | | | | | |

## பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.

- குமரன் நாளை விழாவுக்கு வருவான் எனக் கூறினான். ( )
- தமிழினி இன்று பாடிய பாடல் என் உள்ளம் கவர்ந்தது. ( )
- நாளை இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை அவதான நிலையம் அறிவித்தது. ( )
- நான் இனிமையாகப் பாடி ஆடினேன். ( )
- நான் கொவிட் 19 விடுமுறைக்காலத்தில் நன்றாகப்படிப்பேன்.( )

# 5.சுருக்கவினா

- வினை என்றால் என்ன ?
- வினைச்சொல்லின் பண்புகள் இரண்டு தருக?
- குறிப்பு வினைச்சொற்களுக்கு உதாரணம் 2 தருக?
- தெரிநிலை வினையில் எவ் இடைநிலை எழுத்துக்கள் எதிர்காலத்தைக் காட்டி நிற்கும் ?
- தெரிநிலைவினையில் எவ் இடைநிலை எழுத்துக்கள் இறந்தகாலத்தைக்காட்டி நிற்கும் ?

# விடைகள்

அ” பகுதியிலுள்ள வினாக்குப் பொருத்தமான விடையை ஆ பகுதியிலிருந்து தெரிவு செய்து இணைக்குக.

| | |
|---|---|
| வினைச்சொல் | மூன்று காலமும் உணர்த்தும் |
| ஓடினான் | இறந்தகாலம் |
| வருவாள் | எதிர்காலம் |
| விரைகின்றது | அஃதிணை |
| செய்கின்றாள் | நிகழ்காலம் |

2.பின்வரும் சொற்கள் வைத்து வாக்கியம் அமைக்கும்

- கண்டுபிடித்தார்கள்:-தொலைந்து போன நாய்க்குட்டியை நண்பர்கள் தேடி கண்டுபிடித்தார்கள்.
- சிரித்தான்:-சிறுவன் நகைச்சுவைக்காட்சியை கண்டு சிரித்தான்.
- கேட்டாள்-குமாரி தனது பாடம் தொடர்பான சந்தேகங்களை ஆசிரியரிடம் கேட்டாள்.
- வரைந்து முடித்தாள்:- சுபா சித்தரப்போட்டிகளுக்கான சித்திரங்களை வரைந்து முடித்தாள்.
- செய்தான்:- சிற்பி அழகிய சிலையை செய்தான்.

(இங்கு காலம், திணை, பால், எண், இடம் முதலியவற்றை கவனித்து வாக்கியங்கள் அமைக்கமுடியும்)

# 3.பின்வரும் அட்டவணையை நிரப்புக .

| இல | வினைச்சொல் | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | பாடினான் | உயர்திணை | ஆண்பால் | ஒருமை | படர்க்கை |
| 2 | மேயந்தன | அஃதிணை | பலவின்பால் | பன்மை | படர்க்கை |
| 3 | எழுதுகின்றீர்கள் | உயர்திணை | பலர்பால் | பன்மை | முன்னிலை |
| 4 | வந்தேன் | உயர்திணை | ஆண்பால் | ஒருமை | தன்மை |
| 5 | நின்றாள் | உயர்திணை | பெண்பால் | ஒருமை | படர்க்கை |
| | | | | | |

## பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.

- குமரன் நாளை விழாவுக்கு வருவான் எனக் கூறினான். (பிழை)
- தமிழினி இன்று பாடிய பாடல் என் உள்ளம் கவர்ந்தது. (சரி)
- நாளை இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை அவதான நிலையம் அறிவித்தது. (சரி)
- நான் இனிமையாகப் பாடி ஆடினேன். (சரி)
- நான் கொவிட் 19 விடுமுறைக்காலத்தில் நன்றாகப்படிப்பேன்.(பிழை)

# 5.சுருக்கவினா

- 1.வினை என்றால் என்ன?

  செயல் குறித்து வருவன யாவும் வினை எனப்படும்

- 2.வினைச்சொல்லின் பண்புகள் இரண்டு தருக?

  1. வினைச்சொற்களின் பொதுவான பண்பு செயலை உணர்த்துவதாகும்

  2.சென்றான், படிக்கின்றான், உண்பான் ஆகிய சொற்கள் முறையே இறந்தகாலம்,

  நிகழ்காலம்,எதிர்காலம் என்பனவற்றை உணர்த்தி நிற்பது ஆகும்.

- 3.குறிப்பு வினைச்சொற்களுக்கு உதாரணம் 2 தருக?

  இராமன் கரியன்

  அவன் கடுநடையன

- 4.தெரிநிலை வினையில் எவ் இடைநிலை எழுத்துக்கள் எதிர்காலத்தைக் காட்டி நிற்கும் ?

  ப்,வ் என்னும் இடைநிலைகளைப் பெற்று எதிர்காலத்தைக்காட்டும்

5.தெரிநிலைவினையில் எவ் இடைநிலை எழுத்துக்கள் இறந்தகாலத்தைக்காட்டி நிற்கும் ?

தெரிநிலைவினை த்,ட்,ற்,இன்,இ என்னும் இடைநிலைகளைப் பெற்று இறந்த காலத்தைக் காட்டும்.

நன்றி